உளி- 1 | ஓசை-51 | மே-2021 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

ஆசிரியர் : ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
மதன் குமார்

அட்டைப்படம் :
ரவி பேலட்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| வினோதன் | - 4 |
| தி. இராஜபிரபா | - 5 |
| செ.புனிதஜோதி | - 6 |
| சௌவி | - 7 |
| வீரமணி | - 8 |
| பெணடிக் அருள் | - 9 |
| ந.சிவநேசன் | - 10 |
| முகமது பாட்சா | - 11 |
| காயத்ரி ராஜசேகர் | - 12 |
| சகா | - 13 |
| கதிர் அவன் | - 14 |
| மழைக்குருவி | - 15 |
| ச.விவேக் | - 16 |
| சரண்யாசத்தியநாராயணன் | - 17 |
| ப.தனஞ்ஜெயன் | - 18 |
| நல முத்துகருப்பசாமி | - 19 |
| கோ.ஸ்ரீதரன் | - 20 |
| மா.காளிதாஸ் | - 21 |
| கார்த்திகேயன் மாகா | - 22 |
| சந்துரு | - 23 |
| லக்ஷ்மி | - 24 |
| தி.கலையரசி | - 24 |
| வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் | - 25 |
| ஜெயாபுதீன் | - 26 |
| கோ.லீலா | - 27 |
| ரிஸ்கா முக்தார் | - 28 |
| சுப. முத்துகுமார் | - 29 |
| ராம் பெரியசாமி | - 30 |
| சுசீந்திரன் | - 31 |
| தங்கேஸ் | - 32 |
| வீரசோழன்.க.சோ. திருமாவளவன் | - 33 |
| கவிதை மொழியன் | - 34 |
| பிரபுசங்கர் க | - 35 |
| மதுசூதன் | - 36 |
| ஐ.தர்மசிங் | - 37 |
| வினாயக மூர்த்தி | - 38 |
| ரீனாஜெயா | - 39 |



கட்டாந்தரையில்
தூக்கி வீசப்பட்டு
வாய்பிளந்து துள்ளும்
மீன்களைப் போல,
நாங்கள் துடிப்பது
தெரியவில்லையா கடவுளே ?

ஒரு குட்டி விமானத்தின்
எந்திரக் கண்களுக்கு
இத்தனை பிணங்கள்
தெரியும் போது - உன்
மூன்றாம் கண்ணை
புரையா மறைக்கிறது ?

மரணங்கள்கூட
பழக்கப்பட்டவைதான்,
ஆக்ஸிஜன் மட்டுமல்ல
எரிகட்டைகள் வாங்கக்கூட
வக்கில்லாத போதுதான்
வலி தொடைநுழை
வண்டாகி வலுக்கிறது !

“உயிர்காக்க உதவும்
ஏதேதோ இருக்கின்றனவாம்“,
ஒப்பாரிச் சத்தத்தில்
இதைக் கேட்டுத்தான்
பலரும் அழுதார்களாம் !

பெருந்தொற்று காலத்தில்
எல்லாத் திசையிலும்
வறுமையெனத் தெரியும்,
உன் மனசாட்சியை - எங்கே
அடமானம் வைத்தாய் ?
எவ்வளவு கொடுத்தார்கள் ??
என்றுகூட கேட்டு விட்டேன் !

தொற்றுகளை தடு,
அல்லது மருந்துகொடு
அல்லது - அடுத்தடுத்த
மனிதப் படைப்புகளிலாவது,
வெளியே எடுத்து
கழுவிக் காயவைக்கும்படி
நுரையீரல்களை
படைத்துத் தொலை !

இதை கேட்டுவிட்டு,
பாகற்காயைப்போல
ஒற்றைக் காதில்
தொங்கிக் கொண்டிருந்த
முகக்கவசத்தை
இரண்டாம் காதிற்குள்
இழுத்து விட்டபடி
நகர்ந்துவிட்டார் கடவுள் !

பின்பொரு நாள்
அவரை - தடுப்பூசிக்கான
இரண்டாம் தவணை
வரிசையில் பார்த்தபோது,
என் கோவத்தை - நானே
கொலை செய்துவிட்டேன் !

விநோதன்



அருகில் சென்று
கரம் பிடித்து
நலம் விசாரிக்கிறேன்!
அன்பின் மிகுதியில்
கரம் பிடித்து மகிழ்கிறேன்!
ஆசையுடன் வாங்கி வந்த
பரிசையும் இனிப்பையும் தருகிறேன்!
கடந்த காலம் நிகழ் காலம்
எதிர் காலமென
முக்கால நினைவுகள் குறித்தும்
எண்ணத்தில் இருப்பதை
எதார்த்தமாய் உரைக்கிறேன்!
மெல்லமாய் அடித்து
செல்லமாய்ப் பேசுகிறேன்!
வேடமிடா கோமாளியாகவும் நடிக்கிறேன்!
இடையிடையே இரண்டொரு
நகைச்சுவையும் கூறுகிறேன்!

எதற்குமே எந்தவித
சலனமுமின்றி நிற்கிறாள்/ன்
சடப் பொருளாய்!
வாவென்றும் அழைத்திடாது
அவன் / அவள் என்னும் மனிதன்!
ஆறறிவுக்கும் / ஐந்தறிவுக்கும்
என்ன வேறுபாடு!

நகை வாங்கி மகிழும்
மனநிலையில் நாமில்லை
விலைவாசி ஏற்றம்!
கோடி கிடைத்தாலும் கிடைக்காப் பெறா
புன்னகையை
மலரச் செய்திடுவோம் எப்போதும் முகமதில்!
வேறெதுவும் இல்லை
இலவசமாய்த் தருவதற்கு நம்மிடம்!

தி. இராஜபிரபா



நான்கடந்து விட்டதாய்
அவர்கள் பேசும்
வல்லூறுச் சொற்கள்
இதய ஊனைக் கொத்தி தின்கின்றன

கண்ணீர்பூக்கள் முந்திவந்து
முந்தானையை நனைக்கின்றன

ஐம்புலன்களும் கொதித்து எழுந்தாலும்....
இயலாமைப்பூக்கள்
மௌனம் காக்கப் பணிக்கின்றன

என் உடையிலும், பேச்சிலும்,நடையிலும்
கள்ளப்பார்வை வீசி
கழிவுகளைச் சுமக்கின்றனர்

வெண்ணிலவை நோக்கி
நட்சத்திரக்கற்களை கொண்டு
வீசமுயல்கின்றனர்

தனித்து வாழ்பவர்களின் வாழ்க்கையை அவர்கள்
எடுத்து விளையாடும்
செப்புச் சாமான்களாய்
போட்டு உடைத்துவிடுகின்றனர்

இங்கே
உடைபடுவது உயிருள்ள
இதயம் என்பதை இவர்களுக்கு
யார் உரைப்பார்?

செ.புனிதஜோதி



ஆற்றைக் கைகளில் அள்ளி
வயிற்றுக்குள் நிரப்பிக்கொண்டு போனார்கள்
ஆறு அப்படியே ஓடிக்கொண்டிருந்தது

ஆற்றைக் குடங்களில் அள்ளி
வீட்டுக்குக் கொண்டுபோய்
அண்டாக்களிலும் தொட்டிகளிலும்
நிரப்பினார்கள்
ஆறு அப்படியே ஓடிக்கொண்டிருந்தது

ஆற்றை லாரிகளில் அள்ளி
ஊர் ஊராய்க் கொண்டுபோய்
விற்றார்கள்
ஆறு அப்படியே ஓடிக்கொண்டிருதது

ஆற்றைக் குழாய்களில் அள்ளி
நீண்டதூரம் கொண்டுபோய்
கிணறுகளில் நிரப்பினார்கள்
ஆறு அப்படியே
ஓடிக்கொண்டிருந்தது

ஆற்றை அணைகளைக் கட்டி
அள்ளி வைத்துக்கொண்டார்கள்
அடுத்தவர்களுக்குக் கொடுக்ககூடாதென்று

அதற்குப் பிறகுதான்
ஆறு செத்துப்போய்விட்டது

சௌவி



அரச மரம்
குளத்தங்கரைனு
அம்போனு
கெடந்தவருக்கு
கோயில கட்டி
பெத்த புள்ளையாட்டம் பார்த்துகிட்டோம்

கோச்சுகிட்டு போய்
கோவணத்தோட
நின்ன தம்பிக்கும்
ஆறுபடைவீடு கட்டி
அழகு பார்த்தோம்

காட்லயும் மேட்லயும்
கஷ்டப்பட்ட
இன்னொரு
அய்யனுக்கும்
கிரானைட்ல
கோயில் கட்டி
ஏசி கூட போட்டு
வச்சோம்

மண்டை ஓடு
மயானம்னு
சுத்திகிட்டு திரிஞ்ச
அப்பனுக்கு
பெரிய பெரிய
கோயில கட்டி
குடிவச்சோம்

பாம்பு படுக்கைனு
சமனில்லாம
ஆடிக்கிட்டு கிடந்த
மாமனுக்கு
ஊஞ்சல் சேவை
உற்சவம்னு
நிறைய
பண்ணியிருக்கோம்

தங்க கிரீடம்
வைர மூக்குத்தி
பச்சை பட்டு
பவள மாலைன்னு
ஆத்தாளுக்கு
பண்ணதெல்லாம்
சொல்லி மாளாது

வேளாவேளைக்கு
ஆகாரம்
அழகழகா அலங்காரம்
வருசம் ரெண்டு திருவிழா
காவலுக்கு
காம்பவுண்டு
சுத்தி நாலு கேமரானு
எவ்வளவோ
செஞ்சோம்

எங்கப்பே போனீங்க
எல்லாரும்

நன்றியெல்லாம்
மனுசங்களுக்கு
மட்டுந்தானா

✍ வீரமணி



இருந்தாலும் அந்த மூக்கையன்
பொண்டாட்டி செத்ததுக்கு
நீ இந்த அழுவ அழுதுருக்க கூடாதுடி
என என் அம்மாவிடம்
பக்கத்து வீட்டு
மரகதம் பாட்டி  சொல்ல
நல்ல இடம் நல்லா வாழனும்னு
நகைநட்டெல்லாம்
செஞ்சு போட்டுட்டுட்டு
என்ன நட்டாத்துல விட்டுட்டு போன
எங்காதல நெனச்சுத் தான்
நான் அந்த அழுகை அழுதேன்
என அம்மா சொன்னதும்
அடி திருட்டுப்பய மவளே
அப்போ நான் செத்தாலும்
நீ உங்காத்தால நெனச்சிதான்
அழுவியாடி என
மரகதம் பாட்டி சொன்ன நிமிடம்
சிரித்த அம்மாவிற்கு
மரகதம் பாட்டி நிச்சயம்
அம்மாவாகவே தெரிந்திருக்க
வேண்டும்!

பெனடிக் அருள்

# தனித்த மதியத்தின் கண்கள்



அந்த வீட்டில்
எல்லோரும் பணிக்கு போய்விட்ட மதியங்களில்
குழந்தையின் இருப்பு
தனிமையின் நகங்களில் சதைத்துணுக்காக சேர்ந்து
கொண்டிருக்கிறது
அம்மாவின் முகம்
அலைபேசி வழியே வலுக்கட்டாயமாக திணிக்கும்
சோற்றுப்பருக்கைகளில் இயலாமையின் ருசி
அதிகம்
பிரிந்திருத்தலின் கசப்பை மிடறுமிடறாக விழுங்கிக்
கொண்டு வீறிட்டழும் குழந்தையின் கனவு
டோரா புஜ்ஜியின் பையில் நிச்சயமாக
இல்லாதபோதும் தொடுதிரையை
பின்பற்றி
ஊர்வதைத் தவிர வழியில்லை
மெல்ல மெல்ல கிளைகளைக் காணாது
மின்கம்பிகளை
பழகிக் கொள்ளும்
பறவையாகிவிடும்
குழந்தை
ஆயம்மா மடியில்
உறங்கிவிடுகிறது
அம்மாவின் உடல்சூட்டை
கரடி பொம்மையில் தேடியபடி.

ந.சிவநேசன்



ஒரு ரொட்டித்
துண்டுக்காகத்தான் நடக்கிறேன்
எரிச்சலுடன் திட்டும் வயிறுக்குத் தெரியாது...
நான் ஓர்
ஓயாத நடைவாசி!

அவர்கள்
புழுதிப் பறக்கப் பறக்கிறார்கள்....
ஆசை விரட்டிக் கொண்டேயிருக்கிறது!

மல்லிகையை
முழம் போட்டு முடியில் தொங்கவிட்டவளின்
முகவரி:
இப்போது யார் வருகிறீர்கள்!

அந்த ஒரு ரொட்டித் துண்டு
இப்போது யாரிடம் யாருக்காக இருக்கிறது?
நான் ஓர் ஓயாத நடைவாசி!

அழுகையை
பல்லாக்கில் தூக்கிக் கொண்டு போகிறவன்
கடைசியாக
எப்போதுதான் சாப்பிட்டிருப்பான்?

வெட்டியான் வீட்டில்
ரொட்டியின் மணம் தீச்சல் வாசனை!

பசி வருகிறவன்
தினமும் தட்டிக் கொண்டேயிருக்கிறான்
ரொட்டியின் வாசலை!

முகமது பாட்சா



வாழ்வு சூழ் பேரிரைச்சலினின்று
நான் ஓடிப்போகிறேன்
சங்கீதமும் சத்தமாய்
எரிச்சலுறுகிறேன்
சிறு அசைவும் பூகம்பமாய்
பயமுறுகிறேன்
ஏகாந்தம் தேடிப்பிடித்து
ஒளிந்து கொள்கிறேன்
மெல்ல மெல்ல
ஆழ்கடலில் அமிழ்ந்ததாய்
அனுமானிக்கிறேன்
புவியீர்ப்பிழந்து அண்டத்தில்
அலைவதாய் அலைக்கழிகிறேன்
வான்தொடும் அடுக்ககத்தில்
ஏதோவொரு சிற்றறையில் கதவறைந்து சிக்கிக்
கொண்டதாய்
அலறுகிறேன்
என் குரல் எனக்கே கேட்கவில்லை.

கா யத்ரி ராஜசேகர்



எனக்கு மூச்சு முட்டுகிறது...
தயவுசெய்து
என் பக்கத்தில் நிற்கும் யாராவது
முகத்திற்கு நேரான
அந்த ஜிப்பையும் துணியையும்
கொஞ்சம் விலக்கி விடுங்கள்...!
அதோ பாருங்கள்
என்னிலிருந்து மூன்றாவதாக
காத்திருப்பவர் கால்களை
நாய் கடித்து இழுக்கிறது
கொஞ்சம் விரட்டி விடுங்கள்...!!
எங்களை, மரத்தின் நிழலிலாவது
கொஞ்சம் ஓரங்கட்டி வையுங்கள்
அவைகள் வெளியிடும்
ஆக்சிஜனையாவது
உள்ளிழுத்துக் கொள்கிறோம்...!!!
ஆக்சிஜன் கிடைக்குமென்று
காத்திருந்த நாங்கள்,
ஏமாளிகளாய்
எரிபடுவதற்காக காத்திருக்கிறோம்...
சீக்கிரம் எங்களது டோக்கனை
கூப்பிடுங்கள்...!!!!

சகா



**யா**ருமற்ற
யாரோ ஒருவரின்
எல்லாமுமாக
அது இருந்திருக்க கூடும்

மனம் பிறழ்ந்தவனின்
பிதற்றல் மொழிகளை
உணர்ந்து அவனோடு
விழி மொழியில்
அது பேசியிருந்திருக்க கூடும்

அனுதினமும் முகமறியாத
யாரோ ஒருவரின்
கரங்கள் எடுத்து வைக்கும்
சில ரொட்டி துண்டுகளுக்கு
அது விசுவாசமாக
இருந்திருக்க கூடும்

யாரோ ஒருவருடைய விரல்களின்
தலை வருடலுக்காகவும்
யாரோ ஒருவரின் குரலுக்காகவும்
அது ஏங்கி தவித்திருக்க கூடும

யாரோ ஒரு நடை பாதைகாரனின்
கிழிந்த கோணிக்குள் நுழைந்திருந்து கொண்டு சில
மழைக்கால இரவு பொழுதுகளை
அது கண்விழித்து கடந்திருக்க கூடும்

பசித்த வயிற்றோடு
காய்ந்து போன
யாரோ ஒரு ஏழை வீட்டு
அடுப்படி கதவுக்கருகில்
வலியின் விசும்பலோடு
அது உறங்கியிருக்க கூடும்

இவ்வளவு ஏன்

ஊராரின் ஊசிமுனை வார்த்தைகளால்
அனுதினம் ரணப்படும்
பேறுகால வாய்ப்பு கிடைத்திடாத
யாரோ ஒரு தாயிற்கு
அது வளர்ப்பு பிள்ளையாக
வாழ்ந்திருக்க கூடும் ...!

நாய்க்குட்டியென்பது ...

கதிர் அவன்



இப்போதெல்லாம் கோவில்களில் இருக்கும்போது
எனக்கு பிரார்த்தனைகள் வருவதில்லை

ஒரு புராதன கட்டிடத்தில் இருக்கும்போது
எனக்கும் ஒரு புராதனத்தன்மை வந்துவிடுகிறது

ஆயிரமாண்டுகள் பழமையான ஒரு கட்டிடத்தில்
நான் இருக்கிறேன் என்பது
என்னுள் அதிர்வுகளை உண்டாக்குகிறது

அந்த அதிர்வுகள் மிகப் பிரம்மாண்டமான
பைத்தியநிலையைக் கொண்டிருக்கின்றன
அந்த அதிர்வுகள் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு
நான் மறந்துபோன எதையோ
நினைவுபடுத்த முயற்சிக்கின்றன
அந்த அதிர்வுகள் அங்கிருக்கும்
சிலைகளையும் சிற்பங்களையும்
நான் ஏற்கனவே கண்டிருந்த
ஒரு பழைய புகைப்படத் தொகுப்பைக்
காண்பதைப் போல
காண வைக்கின்றன

புராதன கோவில்களுக்குள் மெல்ல மெல்ல
நுழையும்போது நான் காலத்தால்
பின்னோக்கி செல்கிறேன்

இறந்த காலத்தில் வசிப்பதைப் போன்று
ஒரு பிரமை தொற்றுகிறது

புராதன கோவில்களில் இருக்கும்
சிறிய நீர் வழித்தடங்கள் பாதாள சுரங்கங்களாக
இருக்குமோ என சந்தேகிக்கிறேன்
பாதாளச் சுரங்கங்கள் என்னை நாலாயிரம்
ஆண்டுகளுக்கு முந்தைய எகிப்திலோ அல்லது
குமரிக்கண்டத்தில் போய் முடியுமோ என
குதூகலமடைகிறேன்

பிரகாரத்தில் அமர்ந்திருக்கிறேன்
காலம் ஆற்று நீரைப் போல சலசலத்துக்
கொண்டிருக்கிறது
அதில் விழுந்த இலையைப் போல
நான் தழும்பிக் கொண்டிருக்கிறேன்.

மழைக்குருவி



இருளின் கடைவாய்ப்
பல்லில் சிக்கிக்
கொண்டிருந்தது போலாரிஸ்

மார்பில் விழுந்த நிலவை
உதற முடியாமல் ஓடி
அழிக்கப் பார்க்கிறது நதி

கந்தர்வ யாழிலிருந்து வீசும்
அளபெடைத் தென்றல்
நீக்கமற வானம்

சேர்த்து வைத்து
சிதறடிக்கிறது
உடைந்து நொறுங்கி
உயிர்த்தெழுகிறது

இருப்பின் பிடிமானம்
ஒவ்வொரு முறையும்
தளர்கிறது
ஒரு இறப்பிலும்
ஒரு சில இழப்பிலும்

ஒடிந்து போன தீக்
குச்சிகளுக்குள்
கருக்கலைப்பான
நெருப்பிற்கு
அணைந்து போன
திரியின் காத்திருப்பு

ஒரு இரவுக்கான உயிர்ப்
ஸ்பரிசம் நுகரப் படாததின்
ஊமைப் புலம்பல்

போரில் இறந்த தந்தை
உயிர்த்திருப்பதாய்
குழந்தைக்கு சொல்லப்
படும் பொய்க் கதை

நம்புவதாலேயே பற்றிக்
கொள்கிறது இந்த
அன்பெனும் உயிரெச்சம்

*ச.விவேக்*



தாவாங்கட்டையை பிடித்து
தலையில் வகிடு எடுத்து
இரட்டை பின்னலிட்டு
பான்ஸ் பௌடரை
முகத்தில் அளவாக பூசி
பழிப்பு காட்டியபடியே
கண்ணில் மை தீட்டி
சிவப்பு நிற
சாந்து பொட்டால்
நெத்தியிட்டு
மல்லி கனகாமரத்தை
தலையில் சூடி
என் அழகை ரசித்து
கன்னம் தடவி
நெட்டி எடுத்துக்கொண்டிருக்கின்றாள் அம்மா..
இன்னும் சற்று நேரம்
என்னை உறங்க விடுங்கள்
அம்மாவின் முத்தம் ஒன்று
பாக்கி இருக்கின்றது.

சரண்யாசத்தியநாராயணன்

## மறதி



எங்கள் தெருவில் குறுக்கு நெடுக்குமாகத் திரியும்
பூனை ஒன்று அடிப்பட்டது
பூனையை அடித்த வண்டி
எந்தவிதமான சலனமில்லாமல்
அதே வேகமாகச் சென்றது

பூனையின் மியாவ் சத்தம்
வேகமாகக் கேட்டதும்
குழந்தைகள் ஒன்று கூடி
தூக்கிச் சென்றார்கள்

சற்று நேரத்தில் இறந்து போனது
அந்தப்பூனை
பள்ளம் தோண்டி புதைத்தார்கள்
தயங்கிய உள்ளத்தோடு

மனிதர்களின் கண்களில்
இல்லாத கருணையை
குழந்தைகளின் கண்ணீரில்
இறந்த பிறகுதான் தெரிந்து கொண்டது அந்த
பூனை

பெரும்பாலும் பூனையின் மியாவ்
சப்தம் யார் காதுகளிலும்
வீழ்வதில்லை இப்பொழுது

வீழ்ந்தாலும் பூனையை
வாஞ்சையோடு பார்ப்பதில்லை
குறுக்காகச் சென்றாலும்
கவனிக்க ஆர்வமும் இல்லை
ஆனால் இன்று வரை வாஞ்சையோடு
மனிதர்களைப் பார்க்கிறது
ஊர்ப் பூனைகள்.

ப.தனஞ்ஜெயன்

# முடிவுறா கோபங்கள்



முற்றத்துத் துளசிச் செடி
நீ வலம் வரும்போதெல்லாம்
உதடசைவினை
உற்று நோக்குகிறது

அழைப்பு மணி ஓசையுடன்
உன் முகம் சுழிப்பையும்
சேர்த்தே பதிவு செய்கிறது
உன் வீட்டு கடிகாரம்

தனிமையில் கரையும் நிலா
கேள்விக் குறியாய்த்
தெரிகிறது எனக்கு மட்டும்...

தேநீர் கோப்பையின்
ஆவியை விட்டு விட்டு
தேநீரை மட்டுமே பருகுகிறேன்

உனது இந்த
முடிவுறா கோபங்களுக்கு
என்னையே எண்ணெய்யாய்
வார்த்து விடாது மிகுந்த
கவனமுடன் பயணிக்கிறேன்

காலதேவன் கைகளில்
சிக்குண்டு ஓடிக்கொண்டிருப்பது
காலம் மட்டுமல்ல
அன்பிற்கும் வசப்படாத சில
முடிவுறா கோபங்களும்தான் !

நல முத்துக்கருப்பசாமி



அந்த முதியவர்
நான்காவது முறையாய்
என்னை கடந்து போகிறார்
எதிரே புங்கைமர
நிழலில் வெகு நேரம் அமர்கிறார்;
மேல் துண்டால்
அங்கும் இங்கும் உடம்பில்
தட்டி கொள்கிறார்;
இரண்டு கைவிரித்து
உள்ளங்கைகளை உற்று பார்க்கிறார்;
கால்களை சம்மணமிட்டு அமர்கிறார்;
பின்பு கால்மேல் போட்டு,
கடைசியாய் கால்நீட்டி
கண்மூடி மரத்தில் சாய்கிறார்;
சடுதியில் எழுந்து
மீண்டும் குறுக்கும் மறுக்குமாய்
நடை போடுகிறார்;
பக்கத்து சிற்றுண்டி கடை
பெயர் பலகையை மீண்டும் மீண்டும்
பார்த்தபடியிருக்கிறார்;
மீண்டும் அதே புங்கமரத்தடி
துண்டு சுழற்றல்,கைரேகை பார்த்தல்
கால் ஆட்டல்;
விமரிசையாய் வாழ்ந்து கெட்ட
மனிதர்களுக்கு
பசி பொதுவாயும்
தடுக்கும் தன்மானம் தனிவுடமையாய்
இருந்தே தொலைக்கிறதே....

கோ.ஸ்ரீதரன்

# "புண்"ணியம்



ஆறி வரும் புண்ணை
அப்படியே விட்டுவிட முடியாது
ஒருமுறை சொறிந்து கொள்கிறேன்.
அது எப்படி வந்ததெனக் கேட்காதீர்கள்
சீழ் உங்களை அருவருக்கச் செய்யலாம்
முகத்தைத் திருப்பிக் கொள்ளுங்கள். எல்லாம்
அழிந்து வரும் உலகில்
புண் தின்னும் ஈக்கள் மட்டும்
பல்கிப் பெருகுகின்றன.
முதன்முதலாகப்
புண்ணாகிய அனுபவத்தைக்
கடைசி வரை சொல்லவே விடுவதில்லை புறனுலகு.
ஒரு புண் பல புண்களை
உள்ளூர வளர்க்கிறது.
புண்ணால் புனையப்பட்ட புறத்தை
மயிலிறகால் வருடுகிறது அகம்.
எத்தனை பேர் புண்களோடு வந்தாலும்
ஒவ்வொரு முறையும்
புன்னகையையும் கட்டவிழ்த்து
பொருக்கை உதிர்க்கிறாள்
காலச் செவிலி.

மா.காளிதாஸ்



பாய்தலுக்கு வழியற்ற அன்பின் நெடுங்குருதியைத்
தலை நீவி விடுகிறாய்
அது வெள்ளாட்டுக் குட்டியாய் மார்பில் கால் போட்டு
உறங்குகிறது
லாக்டவுன் துயரத்து பிணங்களின் ஏக்கம் போல
எனது அழுகையின் மீது
தீராக் காதல் கொண்டிருக்க
யாவர்க்குமான கதறலை மலை உச்சியிலிருந்து
உப்பருவியாய் ஓட விடுகிறேன்
மழை தரமறுத்த இந்த கோடையின் முகத்தில்
அடிப்பதற்கென்றே கூந்தலை வளர்த்தவளின்
பெருங்கோபத்தின் ஒளிப்புள்ளி அழகையும்
ரசிப்பவனுக்கு
இரவென்பது விருந்திற்குப் பிந்தைய
வெற்றிலையாலானது
அறிவிப்புகளுக்கு ஏற்ப இயங்கிக் கொள்ளவும்
ஒடுங்கிக் கொள்ளவுமான
நகரத்தின் முதுகில் பயணிப்பது என்பது செரிக்காத
வயிற்றில் ஊற்றப்படும் ஏழாவது குவளை மது
மாட்டுக் குழாம்புகளில் லாடம் பாய்ச்சும் சுத்தியலின்
ஸ்திரத் தன்மை வந்துவிடுகிறது
நீண்ட வெளிக்குப் பின்பான நம் கூடலுக்கு

கார்த்திகேயன் மாகா

# நதி



நதிகள் ஒரே சாயலுடன்
ஓடுவதில்லை
பருவங்களின் ஒப்பனைகளால்
அதன் உடல்கள் மாறுகின்றன...
சீசாவில் குலுக்கி ஊற்றும்
குளிர்ந்த பியரின் பொங்கும் நுரையுடன்
மழைக்காலத்து
கரைகளின் உதடுகளை
கவ்விச் செல்லுமவை
இடைப் பருவங்களில்
தன் மீது தாழும் மரங்களின் பூக்களை
புன்னகையாய் ஏந்திச்செல்கிறது...

அலை தளும்பும் இரவுகளில்
நிலவையும் நட்சத்திரங்களையும்
சலிக்காமல் பறித்துண்டு
பகலில்
மீனவனின் வலைகளையும்
கரையில் தூண்டிலிட்டு காத்திருக்கும்
சிறுவனின் பையையும்
சேர்ந்தே நிறைக்கிறது...
தன்னுள் குளித்தேறும்
ஆண்களின் அம்மணத்தை
அலட்சியம் செய்யுமது
பெண்ணின் நிர்வாணத்தை மட்டும்
அவர்களின் விருப்பம் போலவே
கண்ணியத்துடன்
தண்ணீருக்குள் ஒளித்து வைக்கிறது...
மீன்களுக்கு பாடல்களையும்
கவிஞனுக்கு கவிதைகளயும்
கால் நடைகளுக்கு தண்ணீரையும்
தந்து விடும் நதி
கோடைகளில்
சிமெண்டுத் தரையில் கழித்துவிட்ட
குழந்தையின் சிறுநீர் போல
பள்ளங்களாய் தேடி
மெலிந்தோடுகிறது...
அந்தந்த பருவங்களுக்கேற்ப
நதியின் உடல் உருமாறினாலும்
முடிந்தவரை அது
நம்பியிருப்போரை
வஞ்சிக்காமலிருக்கவே
ஊற்றுகளை உற்பத்தி செய்கிறது...
வரலாற்றின் தடங்களில்
மக்களின் புன்னகையை
மொத்தமாய் பலிகொள்ளும்
கொடுங்கோலனின்
இரக்கமற்ற காலத்தைப்போல்
நதியொன்று ஈரமற்று
பாலையாய்
வற்றிப்போவதென்பது
அபூர்வமாய்த்தான் அமைகிறது...

சந்துரு

# அப்பா

ஒற்றை வார்த்தையின் இதிகாசம்!

அதைச் செய்யாதே
அப்பா அடிப்பாங்க!

அப்பா அடிப்பதும்
அறிவைக் கொடுப்பதற்குத்தான்!

அன்று அப்பாவிடம்
வாங்கிய திட்டுகளும் அடிகளும்
இன்று பல சமயங்களில் காதில் ஒலிக்கும்
கீதோபதேசங்கள்!

அறிவுரை மட்டுமே சொல்லும் அப்பாவிற்கு
அன்பாவே
பேசத்தெரியாதா?

அன்று
அப்பாவின் வார்த்தைகள்
இன்றைய வாழ்க்கையின் ஓட்டத்தில் கால் தடுக்கி
விழாமல் ஓடுவதற்கான
உபநிடதங்கள்!

இன்றைக்கும்
அப்பா இருக்கும்வரை நாம் உணர்வதில்லை!

ஒவ்வொரு அப்பாவும்
ஒரு சுமைதாங்கி!

ஒவ்வொரு அப்பாவும்
ஒரு போதிமரம்!

ஒவ்வொரு அப்பாவும்
காலச் சுவடுகள்!

ஒவ்வொரு அப்பாவும்
மெழுகுவர்த்திகள்!

உணரும் அந்த நொடியில் அப்பா
நம்மோடு இருப்பதில்லை!

காலம் கடந்து உணரும் நாம் அனைவருமே
துரதிஷ்டசாலிகள்!!!

அப்பாக்கள்
என்றுமே நூலகங்களில் கேட்பாரற்று அடுக்கப்பட்ட
புத்தகங்கள்!

லக்ஷ்மி



சம்பளம் இன்றைக்கு
வந்து விடுமென
குதூகலத்தில் இருக்கிறார்கள்
அப்பாக்கள்.

கடந்த மாதம்
விட்டுப்போன தேவைகள்
பூர்த்தியாகிவிடும் நம்பிக்கையில்
திளைக்கிறார்கள்
அம்மாக்கள்.

விளையாட்டுப் பொருட்கள்
எப்படியும் கிடைத்து விடுமென
உற்சாகம் பூக்கிறார்கள்
குழந்தைகள்.

தொழிலின்
தொலை நோக்குப் பார்வையை
விரிக்கத் தொடங்குகிறார்கள்
வியாபாரிகள்.

இவர்கள் போக
இன்னும் எத்தனையோ ஆர்வங்களில்
தொடங்கும்
உங்கள் முதல் தேதி என்பது
மகப்பேற்றுக்குத் தவமிருக்கும்
மனைவியருக்கு மட்டும்
அவர்களுடைய
மாத விலக்கின் முதல் நாளாக
இருந்து விடுகிறது.

தி.கலையரசி



காடுகள் அழித்து
வயல்வெளிகள் சமைத்து
வயல்களையும் அழித்து
வீடுகள் அமைத்ததில்
வெட்டாமல் விடுபட்ட
ஓர் அரச மரத்தில்
குடியேறிய பறவைகளின்
விடிகாலைக் குரல்களில்
இன்னமும் வாழ்கிறது
வாழ்ந்துகெட்ட காடொன்று...

வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்



தவறிப்போய்
மிதித்துவிட்டேன்.
எலும்புகள் நொறுங்கும்
சத்தம் கேட்கிறது.
எறும்புக்கேது
எலும்பும்
ரத்தமுமென்கிற
உன்
விஞ்ஞானத்தையும்
உன் கண்களையும்தான்
உன்னை மிதிக்கும்
பாஸிஸமும்
கொண்டிருக்கிறது

ஜெயாபுதீன்



கொத்துமல்லி கறிவேப்பிலை
மணக்கும் புதினா
பூண்டோடு வெங்காயம்
சிறியதும் பெரியதும்
நாட்டு தக்காளி
பாத்து வாங்கியாச்சு
முட்டையும் ரொட்டியும்
அவசியமாய் இஞ்சி
கூடவே எலுமிச்சை
பல பழ வகைகள் கேட்டு
வாங்கியாச்சு...
பாலோடு வெண்ணெய்
திரளான நெய் பார்த்து
பனீரும் கூடையில் போட்டாச்சு
டீதூள், காஃபிதூள்
நாட்டு சர்க்கரை உப்பு
சுக்கு மசாலா வகையோடு
குறைவில்லா பருப்பு வகை
செலவுப்பெட்டி நிரப்பிடலாம்...
பட்டை இலவங்கம் ஏலக்காய்
ரோஜா மொக்கு கடல்பாசி
நட்சத்திர பட்டையோடு
மங்களூர் மொக்கும் இருக்கு
சமையலறை மணக்க
வத்தல் வடக வகைகள்
முந்திரி திராட்சை பாதாம்
பிஸ்தா குங்குமப்பூ
பச்சரிசி பாசுமதி
சீரக சம்பாவோடு தினசரிக்கு
விக்கிரவாண்டி அரிசி
பாத்து வாங்கியாச்சு
பதப்பட்ட பட்டாணி கொண்டக்கடலை
நிலக்கடலை கடலை வகை
சரிபார்த்தாச்சு...
பச்சையும் சிவப்புமாய்
வகையாய் காய்கறிகள்
குவிச்சாச்சு...
மருந்து தைலம் நாப்கின் இருக்கா
தேடிப்பார்த்து வாங்கியாச்சு
ஒரு வாரத்துக்கு யாரையும்
கூப்பிட முடியாது தண்ணீரை
மேல்தொட்டி, கீழ்தொட்டி
நிரப்பியாச்சு...
பூ தோட்டத்திலேயே பூக்குது
சுமை கொஞ்சம் குறைச்சாச்சு...

அடடா !
பற்றில்லா மனசு இதுவா?

தந்திரமாய் எல்லாம் முடித்து
சாவகாசமாய் யோசிக்கிறது
மானங்கெட்ட மனசு
என்ன செய்வார்கள்
சாலையோர தோழர்கள் !

கோ.லீலா



இனி
உன் கண்ணீரை
நீயேதான் துடைத்துக்கொள்ள
வேண்டும்
உன் காயங்களுக்கு
நீயேதான்
மருந்திட்டுக்கொள்ள
வேண்டும்

கொஞ்சம்
சிரமம்தான்
ஆயினும்
கையில் அகப்பட்டதை
பற்றிப்பிடித்தபடி
காலிடறி விழுந்த பள்ளத்தாக்கிலிருந்து
நீயேதான் வெளியேறி
வரவேண்டும்

மீட்பாளர்கள் வரும் காலம்
அது
எப்போதோ கடந்துவிட்டது

ஆக
உன் பாவத்தின் சிலுவைகளை
நீயேதான் சுமந்து செல்ல
வேண்டும்
இனி

உனக்கு
வேறு
வழிகளில்லை!!!

ரிஸ்கா முக்தார்



அவள் புறப்படும் அவசரத்தில் இருப்பாள்
அவளுக்காக யாரோ காத்திருப்பார்கள்
அல்லது
அவள் அப்படிச் சொல்லிக்கொள்வாள்

கோர்த்துக்கொள்ள நினைத்த விரல்கள் மீது
சிலந்தி தன் இழைகளை
மேவிக்கொண்டிருக்கும்

குறுமணற்குன்றுகளின்
காற்று விசிறாத மௌன வெளியில்
அவர்கள் உரையாடல் கிடக்கும்

ஒரு முத்தத்தால் பாரமேற்றியிருக்கலாம்
ஆனாலும்
இன்னும் உலராத பஞ்சாகவே இருக்கிறது
அவர்களின் நினைவிழை

நீண்ட படகொன்றின்
இருவேறு முனைகளில்
அவர்கள் இருக்கை.
வேறு வேறு நதிகளில் மிதப்பதான
சித்திரத்தைத் தீட்டியபடி அலைகின்றன
படகின் துடுப்புகள்.

அப. முத்துக்குமார்



## நீர்

என் கண்களிலிருந்து தாரைத்தாரையாய்
நீர் வழிந்தோடுகிறது
எனக்குப்பிடித்த புளியமரத்தை
வெட்டி விட்டார்கள்
இந்த மரத்தின் இலைகளில் தான்
அம்மாவின் பட்டுப்புடவைக்கு பச்சை சாயம்
தோய்த்தித்திருந்தேன்
இந்த மரத்தில்தான் அப்பா
பேயாக அலைகிறாரென நடுநிசியில்
காத்துக்கொண்டிருப்பேன்
சாயங்காலங்களில் இந்த மரத்தினடியில்
நிறைய நாள் கட்டியணைத்து தூங்கிப்போவேன்
சதுர அடிக்கு ஒரு புல் கூட இப்போதில்லை
என் கண்களிலிருந்து தாரைத்தாரையாய் வழிய
தாகமாகிவிட்டது
ஒரு குவளை நீர் அருந்தவேண்டும் ...

## காற்று

மேற்கு தொடர்ச்சி மலையில் பலத்த காற்றுடன்
நல்ல மழை
தொலைக்காட்சிப்பெட்டியில்
பார்த்துக்கொண்டிருக்கிறேன்
இங்கே மின்விசிறி பழுது
வியர்த்துக்கொட்டுகிறது
பக்கத்து வீட்டில் குளிர்சாதனப்பெட்டியின்
நரக ஓசை தூக்கத்தை கெடுத்துக்கொண்டிருக்கிறது
இந்த பிளாஸ்டிக் விசிறி மட்டையால்
கொசுக்களை விரட்டிக்கொண்டிருக்கிறேன்
சிறுகாயங்கள் ஏற்பட்டால் நானழுகையில் முதலில்
அம்மா
ஊதிவிடுவாள்
அந்தக் காற்றைத்
தேடிக்கொண்டிருக்கிறேன

## நெருப்பு

இன்று மகரஜோதி
மலையடிவாரத்தின் கீழ் என் வீடு
நீங்கள் குடிசையென்பீர்கள்
வீட்டின் அடுப்பங்கரை பற்ற வைத்து
நான்கு நாளாகிவிட்டது
மீதி பீடியை பற்ற வைத்து விட்டேன்
வயிறுதான் என்னவோ
யோசித்துக்கொண்டேயிருக்கிறது ..

## நிலம்

நிலத்தில் நின்று நீர் அருந்தியிருக்கிறார்
நிலத்தில் நின்று வியர்வை
சிந்தியிருக்கிறார்
நிலத்தில் நின்று எச்சில் துப்பியதில்லை

“ நம்ம மண்ணு தாயவிட உசத்திடா “
என்பார்

எரிக்க வேண்டுமென ஒரு கும்பலும்
புதைக்க வேண்டுமென ஒரு கும்பலும்
போட்டிப்போடுகிறார்கள்

ஒரு விதை நெல்லைப்போல
என் அப்பாவை மண்ணில்
விதைத்து திரும்பிவிட்டேன் ...

## ஆகாயம்

இரவில் கண்ணாமூச்சி விளையாடிய
குழந்தைகளை தேடிக்கொண்டிருக்கிறது
நிலா
அவர்களுக்கெல்லாம்
வயதாகிவிட்டதென
மேகங்கள் சொல்லிக்கொண்டிருந்தது
என்னைக்காட்டி யாரும் சோறுவூட்டுவதில்லையென
சோகம் தளும்பியது
கவலைப்படாதே..!!
இரவு வணக்கதிற்கு
உன்புகைப்படத்தைதான்
அனுப்பிக்
கொண்டிருக்கிறார்கள்
என ஆறுதல் கூறியது மேகங்கள்

ராம் பெரியசாமி

# தேவதை சைத்தாயினி



ஒரு நேர்கோட்டு பயணத்தில்
எங்கிருந்தோ வந்த
இடைச்செருகலில்
ஒரு பாதம் படாத பிரதேசத்தில்
வந்து நிற்கிறேன்.

கரப்பான் பூச்சிகள்
திமிங்கலங்களைச் சுமந்து
களைத்துக் கிடந்தன சாலையோரத்தில்.

புணர்ந்து வியர்த்த
புள்ளி ராசாக்கள்
விரயமாகிய விந்துக்களையெண்ணி
அப்போதைக்கு
ஞானியாக மாறிக்கொண்டார்கள்.

அதீத ஆர்வம் கொண்ட
பெட்டைக் கோழிகள்
எதிர்ப்பது போல் அறிக்கைகள் விட்டு
வார்த்தைகளில் வக்கிரத்தை வடித்து
தினவெடுத்த தன் அந்தரத்தைச்
சொரிந்துகொண்டன.

வழக்கம்போல்
விவரம் அறியாத சீதக்காதி வள்ளல்கள்
வானளாவ புகழ்ந்து விருப்பங்களை
அள்ளித் தெளித்ததில்
அளவில் பெருத்தது
அவர்தம் கந்து.

அசீந்திரன்



திட்டமிட்டு தன் பறத்தலை துவக்காத
சின்னஞ்சிறிய பறவை ஒன்று
தன்பிஞ்சு சிறகுகளால்
அந்தி வானத்தை அளந்து கொண்டிருந்தபோது
கடைசி மழைத்துளியாய்
இப்புவியை நனைக்கவந்து கொண்டிருந்த
ஒளிக்கீற்றை
தன் குட்டி குட்டி அலகினால்
கொத்தி சென்று விட்டது
கடைசி படி ஏறிமுடிக்கும் வரை
உடன் வந்த நிழலும் உடனே
இருளில் குதித்து விட்டது
வெட்ட வெளியின் தன்னந்தனியனாய்
நின்று கொண்டிருக்கும்
நான்
எங்கே குதிப்பது ?

தங்கேஸ்



சில துளிகள்
முகத்தில்
விழும்போதெல்லாம்
உஷ்ணம் குறைந்த
பூமியாய்
அதன்மேல் ஓடும்
ஈரஅன்பின்
ஆட்டுக்குட்டியாக
சிலிர்த்து
சில்லென பறந்த
துளிகளாக
முட்டி மோதி
முழு நிலவு துளிகள்
பிறையாய் போனது....

காலமும்
கடந்த பாதையும்
அப்படித்தானேயென
உள் மன வருடல்களுடன்
தொலைந்து போன
மழைத்துளிகள்
விழி பிம்பங்களில் பட்டு
மங்கலாய்போன கண்ணாடியோடு
காண்கிறது கண்கள்.....

தூரத்தில்
குழந்தையொன்றை
முத்தமிட்டும்
குளிப்பாட்டி
ஆடிப்பாடும்
மழையை!!!

வீரசோழன்.க.சோ. திருமாவளவன்

# துவைத்தல் பொழுதில்



வழக்கம்போல
அவளின்
விடுமுறை தின
துவைத்தலொன்றில்,
ஏதுமறியாத
உதவியாளனாக,
போய் நிற்கிறேன்...

ஆரஞ்சு வண்ணத்து
துப்பாட்டா ஒன்றை
கசக்கி
பிழிந்துகொண்டிருக்கிறாள்,
ஒரு
பட்டாம்பூச்சியை பிடித்து
இம்சிப்பது போல..

வெண்ணிற
சுடிதாரொன்றின் மீது,
அவள் அரசன் சோப்பை
தேய்த்த வேகத்தில்,
அந்த
நிலவின் மீது
நீலம்
படிந்துவிட்டிருந்தது..

மூச்சடக்கி மூழ்கி,
கிணற்றுப்பாசியை
எடுத்து வந்த உணர்வு..
அவள்
துவைத்து நீட்டிய
பச்சை புடவையை,
வாங்கி உதறுகையில்..

அழுக்கு நைட்டியிலும்
அம்மனின் அழகிற்கு
குறையாமல் இருக்கும்,
அவள் முகத்தில்
சோப்பு நுரையை வீசியெறியும்,
அந்த கருப்பு நிற ஆடைக்கு
கடவுள் மறுப்புணர்வு
கொஞ்சம் அதிகமே..

பூப்பெய்தி
நன்னீராட்டு பந்தலில்
அமர வரும்,
பருவப்பெண்ணின் வெட்கம்
காண்கிறேன்,
துவைத்தல் முடிந்து
காய்தலுக்கு வருகின்ற
அவளின்
ஆடைகளிடம்...

துவைத்தல்
முடிந்த பிறகும்,
ஏதுமறியாத உதவியாளனாக
அங்கேயே நிற்கிறேன்..
கொடியில்
கிளிப்புகளிடப்பட்ட,
வானவிற்களை ரசித்தபடி..!!

கவிதை மொழியன்



மருத்துவமனை வரவேற்பறையிலமர்ந்து
மும்முரமாக சுடோகு
விளையாடி கொண்டிருக்கிறாள்
நவீன பெண்ணொருத்தி
விடுபட்ட எண்களை
ஒவ்வொன்றாக சேர்த்துக்கொண்டே
வந்தவளின் கவனத்தை திருப்புகிறது
“பார்வதி சொந்தக்காரங்க உள்ளே வாங்க”
என ஒலிபெருக்கியில் ஒலிக்கும் குரல்
எண்களை அப்படியே விட்டு விட்டு
அவள் எழுந்து போக
மரண எண்ணிக்கையில் ஒன்று
கூடிப் போனதாக கொக்கரிக்கிறது பெருந்தொற்று
ஊசலாடிக்கொண்டிருக்கின்றன
சடோகுவில் விடுபட்ட எண்கள்......

பிரபுசங்கர் க



பூனை வளர்க்கலாமென்று
பேசிக் கொண்டிருந்தோம்
ஒவ்வொரு முறை
சிரட்டையை
எறியும் போதும்
அதில் பாலூற்றலாம் என்போம்.
ஒவ்வொரு முறையும்
மீனெலும்புகளை
களையும் போதும்
பூனைக்குப் பிடிக்குமென்போம்.
ஒவ்வொரு முறையும்
ஓணானைப்
பார்க்கும் போதும்
இதை நம் பூனை
பிடித்து விடும் என்போம்.
எதிர் வீட்டு சாம்பல் பூனை
பார்க்கும் போதெல்லாம்
எங்கள் பூனை வெள்ளையென்போம்.
அவ்வப்போது
உற்சாக மிகுதியில் எங்களில் யாராவது
மியாவென்போம்.
நன்றாய்
வளர்ந்து விட்டிருந்த
எங்கள் பூனை எலி பிடிக்க
இப்போது ஒரு வயல் தேவையாயிருந்தது.
அதை வாங்கலாமென்று
பேச ஆரம்பித்தோம்.

மதுசூதன்



சில வேளை
சிறிதாக முளைத்து
அணுகுண்டு பட்டாசாக வெடித்து ஓயும்
சில வேளை
ஆவேசமாக எழுந்து
புஸ்வாணமாக மௌனமாகும்
சில பொழுதுகள்
அருகாமையில் விரிசல் விழும்
சில பொழுதுகள்
திசைகளை விலக்கும் முகங்கள்
சில பொழுதுகள்
துண்டு காகிதங்களால்
சந்திக்கும் மனங்கள்

சில பொழுதுகள்
பேசிக் கொள்ளும் விழிகள்
சில பொழுதுகள்
பேச்சாக வளரும் செய்கைகள்
சில பொழுதுகள்
புன்னகைகளாக பரிணமிக்கும்
கைகள் கோர்த்துக் கொள்ள
சில துளி கண்ணீரில்
கரைந்து போகும்
தூங்கவிடாமல் படுத்திய
அந்த ஊடல்...
அது ஒரு அழகிய
கனாக்காலம்
இல்லறம்
கால்நூற்றாண்டை
நெருங்கியது இருக்கட்டும்
எதற்கெடுத்தாலும்
தலையாட்டுகிற
நிகழ்கால பொழுதுகள்
நிஜமாகவே
சுவராசியமாக இல்லை
வா தோழி!
என்னுடன் பழைய
ஆக்ரோசத்தோடு
வாக்குவாதம் செய்
சப்தமிட்டு சண்டையிடு
கொஞ்சம் கண்ணீரையும்
உதிர்த்துக் கொள்
பேராசை தான்
ஒரு தடவை
ஊடல் கொள்ளுவோம்...

ஜ.தர்மசிங்



புதைந்தாலும்
மீண்டெழும் இவ்வாழ்வு
சிறு
புன்னகை ஏந்தி.

தளராதே மனமே.
பெரிய பீரங்கிகளை
எதிர்கொள்ளும் மார்புகளை
உருவாக்கும் கருப்பைகள்
காலத்திடம் உண்டு.

எவ்வளவு காயமெனினும்
கண்ணீரைத் துடைத்து
எழச் செய்யும்
வரிகளை
கேட்கச் செய்யும் அது.

துரு மூடினாலும்
திறக்கும்
தேவைதான்
கசிகிறது
சிறு ஒளியாய்

விநாயக மூர்த்தி

# தன்முனை கவிதைகள்..



ஆடிய ஆட்டங்களும்
காலத்தின் ஓட்டங்களும்..
தோண்டி எடுக்கப்படுகின்றன
நிலக்கரி சுரங்கத்தில்...

சுளுக்குடன் கழுத்து
முயற்சி எடுக்கிறேன்..
திருப்பி பார்க்க
அவள் வீடருகில் வந்ததும்..

முகவுரை எழுதிவிட்டு
தொடரும் வாழ்க்கை..
முற்றுப்புள்ளி இட்டு
முடிவுசெய்கிறது காலம்..

ஊர் திருவிழா
குடும்பமே கொண்டாட்டம்..
முடியவில்லை அருகில்
வளர்த்தஆடு இல்லாமல்..

திறமையை காட்டுகிறாள்
வாதம் செய்து..
அன்றாடம் விலைபேசியே
கீரைகாரி பிழைப்பில்...

அதிகாலை நேரம்
பறந்துவந்து விழுகிறது..
இறக்கை இல்லாமல்
வாசலில் செய்தித்தாள்..

தங்கத்தை கண்டதும்
கடன் தருகின்றன..
நம்பிக்கையோடு
எல்லா வங்கிகளும்....

மயிலும் கிளியும்
மிக அழகுதான்..
அறுவடை நேரம்
நெருங்கும் வரை..

பின்னிரவு நேரம்
தண்ணீரின் சத்தம்..
எதிர் வீட்டில்
பால்வியாபாரி..

பாலியல் வன்முறை
மாபெறும் பிழைதான்..
நறுக்கென்று பேசுவதைவிட
இறங்கிவிடலாம் செயலில்...

நீரஜா

படைப்பு பெருமையுடன் வழங்கும்



# என்னழகே என்னுயிரே

வெளியீடு விரைவில்